**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை</u>**

<u>OS.No. 33/2024</u>

Date: 02.04.2026 PW.1 (குருசாமி )

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை :</u>**

எனக்கு சண்முகநாதன், சாத்தையா என்பவரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் என்ன வேலைபார்க்கிறேன் என்றால் ரியல் எஸ்டேட் வேலை பார்க்கிறேன். எனக்கு சரவணனை நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியும். நான் திருப்பத்தூர் பெரிய கடை வீதியில் பட்டாசு வெடி கடையில் வெளியே உட்கார்ந்து இருக்கும் போது சரவணன் பக்கத்து கடைக்கு அடிக்கடி வருவார் அதனால் அவர் எனக்கு பழக்கம். எனது வெடிக்கடையில் யார் யார் உட்கார்ந்து இருப்போம் என்றால் நானும் எனது நண்பர்களும் உட்கார்ந்து பேசிக்கொண்டி இருப்போம். மேற்படி வெடி கடையில் சாத்தையா, சண்முகநாதன் என்பவர் எங்களுடன் உட்கார்ந்து இருப்பார்களா என்றால் அவர்களை எனக்கு தெரியாது. அவ்வாறு யாரும் அங்கு வந்து உட்காரவில்லை. நான் கொடுக்கல் வாங்கல் செய்து வருகிறேனா என்றால் செய்கிறேன். தவணை கொடுக்கிறேனா என்றால் மாதத்திற்கு ஒரு வட்டிக்காக பணம் கொடுக்கிறேன். அதற்காக தனியாக அலுவலகம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் வீட்டில் வைத்து கொடுக்கல் வாங்கல் செய்கிறேனா என்றால் இல்லை. நான் சிறிய அளவில் தான் கொடுக்கல் வாங்கல் செய்கிறேன். நான் வருமான வரி கட்டுகிறேனா என்றால் இல்லை. நான் சரவணனுக்கு கடன் கொடுக்கும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் என்.பி.சுப்பிரமணியன் மற்றும் சிவ சுப்பிரமணியன் ஆகியோர்கள் இருந்தார்கள். நான் எங்கு வைத்து கடன் கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்து கடன் கொடுத்தேன். கடன் கொடுக்கும் போது என் வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் அப்போது யாரும் இல்லை. சரவணன் அப்போது எங்கு வசித்தார் என்றால் சிங்கம்புணரி ரோட்டில்

அச்சிக்காட்டு தெருவில் வசித்து வந்தார். நான் கடன் கொடுத்த காலத்தில் சரவணன் என்பவர் திருப்பத்தூர், சிங்கம்புணரி ரோட்டை தவிர வேறு எங்கும் வசிக்கவில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுக்கும்போது பிராமிசரி நோட்டை வாங்கியது தவிர வேறு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரிதான். நான் சரவணன் என்பவருக்கு கொடுத்த கடனை எத்தனை ரூபாயை எந்த எண்ணிக்கையில் கொடுத்தேன் என்றால் மொத்தமாக பதினேழு கட்டு 500 ரூபாய் நோட்டுகளாக (ரூபாய்.8,50,000) கொடுத்தேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 17.02.2022ம் தேதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் 29.02.2022ம் தேதி வாதி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதியின் கணவர் சரவணனின் அப்பாவிற்கு கடன் கொடுத்துள்ளேனா என்றால் கடன் கொடுத்ததில்லை. நான் சண்முகநாதன் என்பவருக்கு அடியாளாக வேலை பார்க்கிறேன் என்றால் இல்லை. அதேபோல் சாத்தையா என்பவரும் எனது கூட்டாளி என்றால் இல்லை. சண்முகநாதன் என்பவர் தவணைக்காக கடன் கொடுப்பவர் என்றும் மேற்படி சண்முகநாதன் சரவணனின் அப்பாவிற்கு கடன் கொடுத்துள்ளார் என்றும் அதனால் அதிக வட்டி கேட்டு அவருடைய அப்பாவை நான், சண்முகநாதன், வாதி ஆகியோர் கடத்தி சென்று அவரிடம் உள்ள பணத்தை கைப்பற்றினோம் என்றும் அது சம்மந்தமாக அவர் புகார் கொடுப்பதிலிருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிராமிசரி நோட்டில் உள்ள இரண்டு கையெழுத்துக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் வித்தியாசம் இல்லை. நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் சரவணனும் சரவணனின் குடும்பத்தாரும் திருப்பத்தூரில் இல்லை என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு பின்பு ஏறத்தாழ 3 வருடங்கள் கழித்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சரவணனுக்கு நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 19.05.2021ம்

தேதியில் கடன் கொடுத்தேன். நான் சொல்வது போல் சரவணனுக்கு கடன் கொடுக்கவில்லை என்றும் நான் தாக்கல் செய்துள்ள புரோநோட்டில் உள்ள 2 கையெழுத்துக்களும் சரவணனுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. சரவணன் என்பவருக்கு கடன் கொடுத்தாக சொல்லப்படும் தேதிக்கு பின்னீட்டு நான் அவரிடம் சென்று கடன் தொகையை திருப்பி கேட்டேனா என்றால் அவரிடம் கேட்கவில்லை. அவர் இறந்துவிட்டார். அதன்பின்பு அவர்கள் வீட்டிற்கு சென்று சரவணன் மனைவியிடம் கடன் தொகையை திருப்பி தருமாறு 2, 3 முறை சென்று கேட்டேன். எந்த எந்த தேதி நான் சென்று கடன் தொகையை திருப்பி கேட்டேன் என்றால் தேதி குறிப்பாக ஞாபகமில்லை. சரவணனிடமிருந்து 2 வருடங்கள் கழித்து கேட்டேனா என்றால் அவர் இறந்து 6 மாதம் கழித்து ஒரு முறையும் அதன் பின்பு சிறிது இடைவெளி விட்டு 2 முறையும் கேட்டேன். நான் சரவணன் இறந்து 6 மாதம் கழித்து அவர் வீட்டில் சென்று கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த கடனுக்கும் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ளவாறு சரவணன் என்னிடம் கடன் வாங்கவுமில்லை என்றும் புரோ நோட எழுதிக்கொடுக்கவில்லை என்றும் நான் பிரதிவாதிகளிடம் இருந்து பணம் பரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன் என்றால் இல்லை.

<u>**மறுவிசாரணை:**</u> இல்லை

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.02 16:21:06 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை